**மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், திருத்தணி**
**அ.வ.எண்.55/2024**

இந்நீதிமன்றத்து எழுத்தர் திருமதி B. கௌசல்யா அவர்களால் சத்திய பிரமாணம் செய்விக்கப்பட்டு வாதி தரப்பு 1ம் சாட்சியின் வாக்குமூலம் 1873 ஆம் ஆண்டு 10வது சட்டத்திற்கு உட்பட்டு இன்று 2025 ஆண்டு நவம்பர் மாதம் 05 ஆம் நாளில் பதிவு செய்யப்பட்டது.

| | | | |
|---|---|---|---|
| பெயர் | : வெங்கடேசன் | மதம் | : இந்து |
| த/பெ | : முனிரத்தினம் | ஜாதி | : -- |
| வயது | : 53 | கிராமம் | : வீரகநல்லூர் மோட்டூர் |
| தொழில் | : விவசாயம் | வட்டம் | : திருத்தணி |

**05.11.2025**
**வா.சா. 1 ன் முதல் விசாரணை**

1. நான் இவ்வழக்கில் வாதி ஆவேன். வாதி தரப்பு 1ம் சாட்சியாக சாட்சியம் அளிக்கிறேன். என் தரப்பில் பிரமாண வாக்குமூலம் தாக்கல் செய்துள்ளேன். எனது பிரமாண வாக்குமூலத்தை நான் சொல்லித்தான் என்னுடைய வழக்கறிஞர் தயார் செய்தார். அதில் உள்ள விவரங்கள் எனக்கு நன்கு தெரியும். பிரமாண வாக்குமூலத்தில் உள்ள கையெழுத்து என்னுடையதுதான். 20.03.2002 ஆம் தேதியிட்ட என் அப்பா எனக்கு எழுதிவைத்த தானசெட்டில்மெண்ட் ஆவணம் இணையவழிநகல் தாக்கல் செய்கிறேன். ( **தானசெட்டில்மெண்ட் ஆவணம் வா.சா.ஆ 1 ஆக குறியீடு செய்யப்படுகிறது)**

2. பட்டா எண் 1495 ல் என் பெயரில் உள்ள பட்டா இணைவழிநகல் தாக்கல் செய்கிறேன். **(பட்டா வா.சா.ஆ 2 ஆக குறியீடு செய்யப்படுகிறது)** திருத்தணி காவல் நிலையத்திலிருந்து 18.12.2024 ஆம் தேதியிட்டு கொடுக்கப்பட்ட மனு இரசீது அசல் தாக்கல் செய்கிறேன். **(மனுஇரசீது வா.சா.ஆ 3 ஆக குறியீடு செய்யப்படுகிறது)** பிராதுப்படி தீர்ப்புசெய்யவேண்டுமாய் பிரார்த்திக்கிறேன்.

(குறுக்கு விசாரணை வழக்கறிஞர் வேண்டுகோளின்படி ஒத்திவைக்கப்படுகிறது)